3rd September 1958]

என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ? அப்படி இல்லாவிட்டால், உடனடியாக அந்த ஹரிஜனங்களுக்கு ஆதரவு கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் தயவு செய்து தனிக்கேள்வி போடலாம்.

SRI S. NAGARAJA MONIGAR : சர்க்கார் இம்மாதிரி குற்றங்களைக் கண்டித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் ஹரிஜனங்களுக்கென்று தனியாக சேரிகளை அமைப்பது, குடி தண்ணீர் கிணறுகளை வெட்டுவது என்று இருப்ப தானது சர்க்காரையும் இவ்விஷயத்தில் ஒரு குற்றவாளி என்று ஏற்படுத்தி விடும் அல்லவா ?

MR. SPEAKER : The question is out of order.

Bus service

*7 Q.—SRI N. R. THIAGARAJAN : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) மதுரை ஜில்லா, சின்னமனூரிலிருந்து சிப்பாலகோட்டைக்கு பஸ் விட வேண்டுமென கலெக்டர் முதலானோர் அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்துள்ளனரா ?

(ஆ) அப்படியானால், அதுசம்பந்தமாய் எடுத்த நடவடிக்கை என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (a) No, Sir.

(b) Does not arise.

Prohibition offences

*8 Q.—SRI M. S. SELVARAJAN : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

மதுவிலக்குக் குற்றங்களில் தண்டனை பெறுபவர்களின் பெயர் விவரங்களை ஜில்லா கெஜெட்டுகளிலும், பத்திரிகைகளிலும் பிரசுரிக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, the answer is in the negative.

SRI M. S. SELVARAJAN : சார், மதுவிலக்குக் குற்றவாளியாக இருக்கும் மானமுள்ள ஒருசிலரையாவது திருத்துவதற்காக இம்மாதிரியான வேறு திட்டங்களையாவது அரசாங்கம் பரிசீலனை செய்கிறதா அல்லது செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மது விலக்குக் குற்றம் செய்தவர்களுக்குக் கோர்ட்டுகள் தண்டனை கொடுக்கிறது. அவர்கள் பெயர்களை கெஜட்டில் பிரசுரம் செய்யவேண்டிய அவசியம் இல்லை யென்றுதான் அரசாங்கம் கருதுகிறது.

Sales tax

*9 Q.—SRI N. R. THIAGARAJAN : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

மதுரை ஜில்லா, தேனியில் (அ) சென்ற ஆண்டு (1957–58), (ஆ) இந்த ஆண்டு (1958-ம் ஞு ஏப்ரல் மீ 30உ வரை) விற்பனை வரி மூலம் வசூலிக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

THE HON. SRI C. SUBRAMANIAM :

	RS.	NP.
1957–58	3,05,843	52
April 1958	14,153	28